பக்கங்கள்:-25

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 29 | சனிக்கிழமை | 12.04.2025 | அதிர்வு 250

## டிப்பர் மோதி ஒருவர் சாவு!

(எஸ்.ரகுதீஸ்)

யாழ். வடமராட்சி கிழக்கு, அம்பன் பகுதியில் டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 06

## கொழும்பு மாநகரசபை உட்பட 18 சபைகளுக்கான தேர்தல்களை இடைநிறுத்தும் உத்தரவு விலக்கல்!

கொழும்பு மாநகர சபை உட்பட 18 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்குச் சம்பந்தப்பட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குத் தடை விதித்து பிறப்பித்த முந்தைய இடைக்கால உத்தரவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று இரத்துச் செய்தது.

சட்டமா அதிபர் தாக்கல் செய்த மனுவைப் பரிசீலித்த பின்னர், மேன்முறையீட்டு நீதிமனந்த்தின் பதில் தலைவர் எம்.டி. முகமது லாஃபர் மற்றும் நீதிபதி கே.பிரியங்க பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற ஆயம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது. 06







# இன, மத வன்முறைக்கு இனிமேல் இடமில்லை!

## யாழில் பிரதமர் ஹறிணி திட்டவட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

**நாட்டில் மீண்டும் இன, மத ரீதியில் வன்முறை ஏற்பட ஒருபோதும் இடமளியோம் என்று பிரதமர் கலாநிதி ஹறிணி அமரசூரிய நேற்று தெரிவித்தார்.**

**51 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி ஆலயத்தின் கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்டபோதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.** 05



## மீண்டும் குட்டி அரசு அமைக்க மக்களே ஆணை தாருங்கள்!

### அக்கராயன் பரப்புரைக் கூட்டத்தில் சிறீதரன் வேண்டுகோள்

“அரசியல் தளத்தின் அடிப்படை அலகுகளாக உள்ள உள்ளூராட்சி மன்றங்களை வென்றெடுப்பதன் மூலமே, எமது மக்களின் அடிப்படை வாழ்வியலையும், அது சார்ந்த அபிவிருத்திச் செயற்பாடுகளையும் கட்டமைக்க முடியும். அத்தகைய சமூகமயப்பட்ட அரசியலுக்கு அடித்தளம் அமைக்கக்கூடிய உள்ளூராட்சி மன்றங்களை இம்முறையும் இலங்கைத் தமிழரசுக் கட்சி கைப்பற்றுவதற்கான ஆணையை எமது மக்கள் வழங்குவார்கள் 05




இலங்கைப் பொருள்களை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அதிரடியாக 44 வீத வரி விதித்த அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் நடவடிக்கை இலங்கையில் பொருளாதார ரீதியில் குழப்பங்களை ஏற்படுத்தியதோ என்னவோ தெரியவில்லை. ஆனால், அதனால் ஏற்படக்கூடிய நெருக்கடிகள் குறித்து ஆராய்வதற்காக நேற்று முன்தினம் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா ஜனாதிபதி செயலகத்தில் கூட்டிய சர்வ கட்சிக் கூட்டம் தமிழரசுக் கட்சி மேலிடத்தில் பல அதிருப்திகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிகிறது.

இந்தக் கூட்டங்களுக்கான முன் முயற்சிகள் எதிர்க்கட்சித் தரப்பிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டது. முதலில் ஆரம்பித்தவர் இ.தொ.கா. தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான்தான்.

அவரது முன் முயற்சி மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம், ஜனாதிபதி செயலகம் ஆகியன ஒன்றிணைய, 06

# வடக்கு மக்கள் எம் மீது கொண்டுள்ள நம்பிக்கையை நிச்சயம் பாதுகாப்போம்

## காரைநகர் கூட்டத்தில் பிரதமர் உறுதி



(எஸ்.நிதர்ஷன்)

"மாகாண சபைத் தேர்தலை வெகுவிரைவில் நடத்துவதற்கு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். வடக்கு மண் பல பிரச்சினைகளையும் இரத்தத்தையும் கண்டுள்ளது. அவற்றை ஆற்றுப்படுத்துவதற்கான பொறுப்பு எமக்குள்ளது. அதற்கான நடவடிக்கைகளை சிறந்த முறையில் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்வோம். வடக்கு மக்கள் எம் மீது கொண்டுள்ள நம்பிக்கையை நிச்சயமாகப் பாதுகாப்போம்."

– இவ்வாறு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய உறுதியளித்தார்.

காரைநகரில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு பிரதமர் மேலும் உரையாற்றியதாவது,

"காரைநகர் மண்ணுக்கு வருகை தந்தமையையிட்டு மகிழ்ச்சிடைகின்றேன். இந்த மண் பல பண்பாட்டு கலாசாரங்களைக் கொண்டுள்ளது. இதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அரசு என்ற ரீதியில் அதற்கான பங்களிப்பை வழங்குவோம்.

1977 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் காரைத்தீவு மண்ணில் சுமார் 80 ஆயிரம் பேர் வாழ்ந்தார்கள். ஆனால், இன்று சுமார் 10 ஆயிரத்து 500 பேர் மாத்திரமே வாழ்கின்றார்கள். இந்த மண்ணில் பல திறமையானவர்களும் பண்டிதர்களும், கல்விமான்களும் தோற்றம் பெற்றார்கள். அவர்கள் பல்வேறு காரணங்களால் நாட்டை விட்டுச் சென்றுள்ளனர்.

இவ்வாறு புலம்பெயர்ந்தவர்கள் மீண்டும் இலங்கைக்குத் திரும்புவார்கள் என நாம் நம்புகின்றோம். அதற்கான சூழலை நாம் ஏற்படுத்திக்கொடுப்போம்.

சரியான வசதிகளும் அபிவிருத்திகளையும் ஏற்படுத்திக்கொடுப்பதன் ஊடாக இந்தப் பிரதேசத்தை மேம்படுத்த முடியும். ஆகவே, உரிமம் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை நாம் வழங்குவோம்.

தென்பகுதியில் உள்ள மக்கள் இந்தப் பகுதி மக்களை நேசிக்கின்றார்கள். ஆனால், இந்த மக்கள் அடிப்படைப் பிரச்சினைகளை முகங்கொடுக்கின்றார்கள். அதற்குப் பல காரணங்கள் உள்ளன.

கல்வி, சுகாதாரம் மற்றும் உட்கட்டமைப்பு ஆகிய பல துறைகளில் பற்றாக்குறை உள்ளதை நான் அறிவேன். யுத்தம் முடிவடைந்து 16 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இந்த பிரச்சினைகள் இன்றும் தொடர்கின்றன. இதற்கு நாங்கள் அரச நிர்வாகக் கட்டமைப்பின் ஊடாகத் தீர்வைப் பெற்றுக்கொடுப்போம்.

2024 ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் சிறந்த தீர்மானத்தை எடுத்தனர். ஊழல் அற்ற அர்ஷித் தெரிவு செய்தார்கள். அதைப்போன்று நாடாளுமன்ற அதிகாரத்தை முழுமையாக எமக்களித்தார்கள்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாட்டு மக்கள் இன, மத விடயங்களுக்கு அப்பாற்பட்டு திறமையான மற்றும் ஊழலற்றவர்களைத் தெரிவு செய்ய வேண்டும். வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம்.

பொருளாதார ஸ்திரப்படுத்தலுக்கு நாம் முன்னுரிமையளித்துள்ளோம். ஸ்திரமான நிலையில் இருந்து கொண்டு தான் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும். அரச சேவையானது நாட்டு மக்களுக்கு வினைத்திறனதாக அமைய வேண்டும். அதற்குச் சாதகமாக சூழலை ஏற்படுத்திக்கொடுத்துள்ளோம். அரசியல் தலையீடுகள் இல்லாமல் அரச சேவை தற்போது சுயாதீனமாக இடம்பெறுகின்றது." – என்றார்.

# புதிய வரி விலக்குகளைத் தவிர்ப்பது நிதி வருவாய் கசிவை தடுக்க உதவும்

## சர்வதேச நாணய நிதியம்

அண்மைய வெளிப்புற அதிர்ச்சி மற்றும் சர்வதேச நடவடிக்கைகள் இலங்கையின் பொருளாதாரத்துக்கு நிச்சயமற்ற தன்மையை உருவாக்கியுள்ளதாகச் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் குழு மேற்கொண்ட சந்திப்புகள் தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த குழு இலங்கை அதிகாரிகளுடன் பொருளாதாரச் செயல்திறன் மற்றும் நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழான நான்காவது மதிப்பாய்வுக்கான அடிப்படை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளது.

இதன்படி, உலகளாவிய நிச்சயமற்ற தன்மை, இலங்கையின் நிதிச் சந்தையை ஏற்ற இறக்கத்திற்கு வழிவகுத்துள்ளது.

இலங்கை முன்னெடுத்துள்ள செயற்பாடுகள் பாராட்டத்தக்கது எனவும் சர்வதேச நாணய நிதியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் வெளிப்புற அதிர்ச்சியின் காரணமாக இலங்கையில் ஏற்படும் தாக்கங்களை மதிப்பிடுவதற்கு அதிகக் காலம் தேவைப்படுவதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிலையான வருவாய் திரட்டல் முயற்சிகள் அவசியமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய வரி விலக்குகளைத் தவிர்ப்பது நிதி வருவாய் கசிவுகளைத் தடுப்பதற்கு உதவும்.

மின்சாரக் கட்டணக் கிரயத்தை ஈடு செய்யும் கட்டணம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும் எனவும் சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

VOTE



# அக்கரைப்பற்றில் நேற்று ஜனாதிபதி அநுர

(றிஸ்வான் சாலிஹூ)

திகாமடுல்ல தேர்தல் மாவட்ட தேசிய மக்கள் சக்தி காரியாலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "வெற்றி நமதே் ஊர் எமதே" எனும் தொனிப்பொருளிலான பொத்துவில் தொகுதி மக்கள் சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை அக்கரைப்பற்று வெள்ளப்பாதுகாப்பு வீதியில் நடைபெற்றது.

இம்மக்கள் சந்திப்பில், தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், ஜனாதிபதியுமான அநுரகுமார திஸநாயக்க பிரதம அதிதியாக கலந்து கொண்டமையோடு, பிரதியமைச்சர் வஸந்த பியதிஸ்ஸ, திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா, அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், தேசிய மக்கள் சக்தியின் பிரதேச அமைப்பாளர்கள், பிரதான செயற்பாட்டாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களுக்காக போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி தனதுரையில் –

நாங்கள் ஒரு போதும் முஸ்லிம், தமிழர், சிங்களவர் என்ற பிரிவினையை உருவாக்குபவர்கள் அல்லர். கடந்த பொதுத்தேர்தலில் எமது கட்சி ஒரு தீர்மானம் எடுத்தது. தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்களுக்கு தேசிய பட்டியலில் உள்வாங்குவது இல்லை என்று முடிவெடுத்தோம். ஆனால், திகாமடுல்ல மாவட்டத்தில் அதிகமான வாக்குகளை தேசிய மக்கள் சக்திக்கு முஸ்லிம்களாகிய நீங்கள் வழங்கியிருந்தீர்கள். இருந்தபோதிலும் விருப்பு வாக்கு அடிப்படையில் முஸ்லிம் நாடாளுமன்றபிரதிநிதித்துவம் இல்லாமல் போனது.




அந்த மக்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தில் இப்பிரதேசத்து முஸ்லிம்களுக்காக அந்த தீர்மானத்தை மாற்றி ஏ.ஆதம்பாவாவை நாம் நாடாளுமன்ற உறுப்பினர் ஆக்கவில்லையா என்பதை உங்கள் மத்தியில் கேட்க விரும்புகின்றேன்.

அது மாத்திரமின்றி உடனடியாக நுரைச்சோலை வீட்டுதிட்ட பிரச்சினையையும் நிறைவு செய்து தருகின்றேன். – என்றும் ஜனாதிபதி தனதுரையில் தெரிவித்தார்.







# வெளிநாட்டு பல்கலைக்கழக கிளைகளை ஒழுங்குபடுத்த புதிய வேலைத்திட்டம்

நாட்டில் நடத்திச் செல்லப்படும் வெளிநாட்டு பல்கலைக்கழக கிளைகள் மற்றும் வளாகங்களை ஒழுங்குபடுத்துவதற்காக புதிய வேலைத்திட்டத்தை தயாரிக்க கல்வி, உயர் கல்வி, தொழிற்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

மேற்படி நிறுவனங்களின் பாடத்திட்டங்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற பல்வேறு முறைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் மதுர செனெவிரத்ன தெரிவித்துள்ளார்.

தற்போது நூற்றுக்கும் மேற்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழக கிளைகள் மற்றும் வளாகங்கள் நாட்டில் இயங்குகின்றன என கணக்கிடப்பட்டுள்ளது.

அவை தற்போது முதலீட்டு சபையில் மாத்திரமே பதிவு செய்யப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் மதுர செனெவிரத்ன தெரிவித்தார்.



# மஹஜன சம்பத் லொத்தர் மோசடி

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத் லொத்தர் சீட்டின் கடைசி 2 இலக்கங்களை பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்ட இருவருக்கு பிபிலை நீதவான் நீதமன்றத்தினால் 10 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

மெதகம, மீகஹவதுர, மியனகந்துர ஆகிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சந்தேகநபர்கள் மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

மஹஜன சம்பத லொத்தர் சீட்டின் கடைசி 2 இலக்கங்களை பயன்படுத்தி விற்பனை நிலையங்களை நடாத்துதல், அதனை வழிநடத்தல், அதற்கு உதவி செய்தல் மற்றும் பங்களித்தல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும் என தேசிய லொத்தர் சபை தெரிவித்துள்ளது.

தேசிய லொத்தர் சபை என்பது லொத்தர் சீட்டுக்களின் ஊடாக தேசிய சிறுநீரக நிதியம், இராணுவ சேவை அதிகார சபை, விளையாட்டு அமைச்சு, ஷ்ரம வாசனா மற்றும் சமூர்த்தி நிதியம் ஆகியவற்றுக்கு திறைசேரி ஊடாக நிதி வழங்கும் பிரதான அரச நிறுவனமாகும்.



# வடக்கு மக்களின் உணர்ச்சிகளுடன் அரசு மோசமான அரசியலை விளையாடுகின்றது

## கடும் கட்டுப்பாடுகளுடன் பலாலி வீதியைத் திறந்தமை குறித்து நாமல் விசனம்

யாழ். பலாலி வீதி திறக்கப்பட்டமை தேர்தலுக்கு முன்பு வாக்குகளைப் பெறுவதற்கான மற்றொரு நடவடிக்கை என சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில்வெளியிட்டுள்ள பதிவிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு மக்களின் உணர்ச்சிகளுடன் மோசமான அரசியல் விளையாடுவதை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

மூடப்பட்டிருந்த யாழ்ப்பாணத்தில் பலாலி வீதிப் பகுதியை கடும் கட்டுப்பாடுகளுடன் திறக்க அரசாங்கம் எடுத்த நடவடிக்கை உண்மையிலேயே கவலையளிக்கிறது.

பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காரணமாக சாலை மூடப்பட்டிருந்தாலும், எந்தவொரு பாதுகாப்பு சரிபார்ப்பையும் பெறாமல் அரசாங்கம் அதை மீண்டும் திறந்துள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. அதனால்தான் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

மேலோட்டமான விடயங்களைச் செய்வதன் மூலம் மக்களை தவறாக வழிநடத்த வேண்டாம் என்றும், வாக்குகளை வெல்வதை மட்டுமே நினைத்து, நாட்டின் பாதுகாப்பை முதன்மைப்படுத்தாமல் நடக்க வேண்டாம் என்றும் நான் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறேன்.

– என்று உள்ளது.

# மனைவியை வாளால் வெட்டி படுகொலை செய்த கணவர்!

அளுத்கம பொலிஸ் பிரிவின் குருந்துவத்த தர்கா நகரப் பகுதியில் பெண் ஒருவர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குருந்துவத்த, தர்கா டவுன் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.

பொலிஸார் நடத்திய விசாரணையில், குடும்பத் தகராறு காரணமாக இறந்தவரின் கணவர் இந்தக் கொலையைச் செய்துள்ளார் என்று தெரியவந்ததுள்ளது.

கொலைக்குப் பிறகு, இறந்தவரின் கணவர் (வயது 45) கொலை செய்யப் பயன்படுத்திய வாளுடன் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அளுத்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இன, மத வன்முறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வளமான மற்றும் ஒன்றுபட்ட நாட்டில் மத மற்றும் கலாசார சுதந்திரத்தை உறுதி செய்வது நம் அனைவரின் பொறுப்பாகும்.

வடக்கு மற்றும் தெற்கின் கலாசார மைய அமைப்புக்களைச் சமமாகப் பாதுகாக்கும் பொறுப்பை நாம் ஒருபோதும் மறக்க மாட்டோம்.

மத மற்றும் கலாசார பன்முகத்தன்மை கொண்ட நாடு என்ற வகையில், மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கான இத்தகைய சிறப்புமிக்க இடங்களை எந்தவித அடக்குமுறையும் இல்லாமல் பாதுகாப்பது நம் அனைவரின் பொறுப்பாகும்.” – என்றார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி ஆலயத்தின் இராஜராஜ ஸ்ரீஇரத்னசபாபதி குருக்கள், மஹாராஜராஜ ஸ்ரீஞானஸ்கந்த குருக்கள், தரிசன சிவசுமகலாநிதி வைத்தியசு குருக்கள் உள்ளிட்ட உள்ளூர் மற்றும் வெளிநாட்டு குருக்கள் மஹா கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்டு பிரதமருக்கு ஆசி வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் குட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று நான் முழுமையாக நம்புகின்றேன்.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில், கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட அக்கராயன் வட்டாரத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளரை ஆதரித்து, கட்சியின் வட்டாரக் கிளைத் தலைவர் சுந்தரலிங்கம் கயூரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சிறீதரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அக்கராயன் பிரதேச ஆதரவாளர்கள் பலரின் பங்கேற்போடு நடைபெற்ற மேற்படி கூட்டத்தில், கரைச்சி பிரதேச சபையின் மேனாள் தவிசாளரும் வேட்பாளருமான அருணாசலம் வேழமாலிகிதன், சபையின் மேனாள் உறுப்பினரான சுந்தரமூர்த்தி தயாபரன், கட்சியின் அக்கராயன் வட்டார வேட்பாளர் தட்சணாமூர்த்தி முரளி, வன்னேரிக்குளம் வட்டார வேட்பாளர் நாகேந்திரம் செல்வநாயகம், கணேசபுரம் வட்டார வேட்பாளர் யோகேஸ்வரன் நிரோயன், அக்கராயன் வட்டாரக்கிளை உறுப்பினர் உஷா சதீஸ்குமார், வட்டாரக்கிளையின் செயலாளர் மருதலிங்கம் யூட் அன்ரனி உள்ளிட்டோர் உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தக் கூட்டம் 'வெற்றிகரமாக' நடைபெற்றிருக்கிறது.

பிரதான எதிர்க்கட்சி தவிர்ந்த ஏனைய எதிர்க்கட்சிகளுக்கு தலா ஒரு பிரதிநிதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் இரண்டாவது பெரிய எதிர்க்கட்சி என்ற முறையில் தமிழரசுத் தரப்புக்கு இரண்டு பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

தமிழரசு நாடாளுமன்றக் குழுத் தலைவர் என்ற முறையிலும், வடக்கு எம்.பி. என்ற முறையிலும் சிறிதரனையும், கிழக்கு எம்.பி. என்ற முறையில் சாணக்கியனையும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்ற கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரனின் கலந்தாலோசனையோடு கட்சித் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஒழுங்கு செய்திருந்தார்.

ஆனால் சிறிதரன் தான் கலந்து கொள்ள முடியாத நிலையில் அந்த இடத்துக்கு சிறிநேசன் கலந்து கொள்வார் என்று எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்துக்குத் தெரியப்படுத்தினார் என அறியப்படுகின்றது.

இதனைக் கேள்வியுற்ற கட்சித் தலைவர் சி.வி.கே.சிவஞானம் உடனடியாக சிறிதரனுடன் தொடர்பு கொண்டு, வடக்கிலிருந்து ஓர் எம்.பி. பங்குபற்ற வேண்டும் என்பதுதான் முறை என்பதால் அந்த இடத்துக்கு மருத்துவர் சத்தியலிங்கம் எம்.பியை அனுப்பும்படி வழிப்படுத்தினார் எனத் தெரிகிறது. அது சத்தியலிங்கத்திற்கும் தெரியப்படுத்தப்பட்டது.

ஆனால், இறுதி நேரத்தில் அந்தக் கூட்டத்துக்கு சிறிநேசனும் செல்கின்றார் என்ற தகவல் சத்தியலிங்கம் எம்.பிக்குத் தெரிவிக்கப்பட்டது. தாமும் அங்கு போய் கட்சியின் உட்பிரச்சினையை அங்கு சர்வகட்சிக் கூட்டத்தில் வெளிப்படுத்த விரும்பாத காரணத்தினால் கடைசி நேரத்தில் கூட்டத்துக்குப் போகும் நடவடிக்கையை நிறுத்திக்கொண்டார் சத்தியலிங்கம் எனத் தெரிகின்றது.

அந்தக் கூட்டத்தில் தமிழர் தரப்பில் – தமிழரசு தரப்பில் – சாணக்கியனே வரி விவகாரங்களையொட்டி ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் காரசாரமான கருத்துக்களை முன் வைத்தார்.

அந்தக் கூட்டத்தில் மொழி பெயர்ப்புக்கு எந்த ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் 'யாராவது தமிழில் பேசினால் நீங்கள் அதனை சிங்களத்தில் மொழி பெயர்த்துக் கூறலாம்தானே?' என்று கூட்ட ஆரம்பத்தில் சாணக்கியனைப் பார்த்துக் கேட்டார் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா. 'ஆம்' என்று தலையசைத்தார் சாணக்கியன். ஆனால் அந்தக் கூட்டம் முழுமையாக சிங்களத்திலும், இடையிடையே ஆங்கிலத்திலும் நடந்து முடிந்தது. தமிழில் யாரும் வாய் திறக்கவில்லை.

சிறிதரனைப் போல சிங்களத்தில் பேச பரிச்சயமற்ற சிறிநேசன் எம்.பி. ஆங்கிலத்திலும் தொடராகக் கருத்துக்களை முன்வைத்து நாடாளுமன்றத்தில் முன்னர், பின்னர் உரையாற்றியவர் அல்லர். அவர் அந்தக் கூட்டத்தில் ஒரு பார்வையாளராக இருந்து விட்டு வந்தார்.

இதற்கிடையில் கிழக்கிலிருந்து தம் அடையாளத்தை வெளிப்படுத்தாத சில சமூக ஊடகங்கள், சாணக்கியன் அந்தக் கூட்டத்துக்கு அழையா விருந்தாளியாகப் போனார் என்றும், கூட்டத்தின் ஆரம்பத்தில் அவர் எப்படி அக்கூட்டத்துக்கு வந்தார் என்ற சாரப்பட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட சிலர் கேள்வி எழுப்பினர் என்றும் வழமை போல, பொறுப்புக் கூறல் கடப்பாடற்ற தங்களது புளுகுச் செய்திகளை அவிழ்த்து விடத் தவறவில்லை.

மேற்படி கூட்டத்திற்கு சஜித் பிரேமதாஸ சுமார் அரை மணி நேரம் தாமதமாகவே வந்து கலந்து கொண்டார். கூட்டத்தில் பங்குபற்றுவோர் பற்றிய விவரத்தை அவர் கூட்டத்தின் தொடக்கத்தில் கேட்டு அறிவதற்குக் கூட அவர் அங்கிருக்கவில்லை. நேரம் பிந்தி வந்தும் கூட அவர் அப்படிக் கேள்வி ஏதும் எழுப்பவுமில்லை.

தம்முடைய வழிகாட்டுதலையும் மீறி, சிறிதரன் எம்.பி. சத்தியலிங்கத்துக்குப் பதிலாக சிறிநேசனை அந்தக் கூட்டத்துக்கு அனுப்பி வைத்தமை குறித்துக் கட்சித் தலைவர் சிவஞானம் பெரும் விசனத்தில் இருக்கிறார் எனத் தெரிய வந்தது.

\+ \+ \+

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் தேர்தல் ஆணையம் பெரும் குழப்பத்திலும் தடுமாற்றத்திலும் இருப்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

உள்ளூராட்சித் தேர்தல் வேட்பு மனுத் தாக்கல் தொடர்பில் தேர்தல் ஆணையம் ஏற்படுத்திய விதிமுறைகள், அது தொடர்பாக அது வழங்கிய சுற்று நிருபங்கள், உத்தரவுகள், வழிகாட்டல்கள் பெரும் குழப்பங்களை – களேபரங்களை – ஏற்படுத்திருப்பது வெளிப்படையானது. வழமைக்கு மாறாக நானூறுக்கும் அதிகமான தரப்புக்கள் தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

முக்கியமாக இளம் வேட்பாளர்களின் வயதை உறுதிப்படுத்தும் பிறப்புச் சான்றிதழ் தொடர்பாக தேர்தல் ஆணையம் விதித்த விதிமுறை, அதற்கான வியாக்கியானம் ஆகியவை பெரிய குழப்பங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. இந்த விடயத்தை ஒட்டி நிராகரிக்கப்பட்ட வேட்புமனுவுக்குரிய தரப்புகள் உயர் நீதிமன்றத்திலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தன. அவற்றில் எல்லாவற்றிலும் தேர்தல் ஆணையம் எதிர்மனுதாரராக இருந்தது.

இந்தப் பிறப்புச் சான்றிதழ் தொடர்பாக உயர் நீதிமன்றம் திட்டவட்டமான ஒரு முடிவை எடுத்து, அதன் அடிப்படையில் ஆறு அடிப்படை உரிமை மீறல் மனுக்களை நிராகரித்துத் தீர்ப்பு வழங்கியிருக்கின்றது.

அந்தத் தீர்ப்பில் உயர் நீதிமன்றம் எடுத்த முடிவுக்குத் தலை கீழான – முரணான – மாறான – விடயத்தை முன் வைத்து, அதுபோன்ற ரிட் மனுக்களை ஏற்றுக்கொண்டு, நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்களைச் சேர்த்துக் கொள்ளும்படி தேர்தல் ஆணையத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு வழங்கியிருக்கின்றது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இந்த உத்தரவு, அதற்கு மேற்பட்ட உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு முரணானது என்பது தேர்தல் ஆணையத்துக்குத் தெட்டத் தெளிவாக தெரியும். அதனால் தேர்தல் ஆணையம் இவ்விடயத்தை உயர் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று, எல்லா வேட்பு மனுக்கள் தொடர்பிலும் நீதி, நியாயமான – சட்ட முறைமையான – ஓர் ஒழுங்கு முறையை அல்லது முடிவை அது பெற்றுக் கொண்டு, நடவடிக்கை எடுக்கும் எனப் பலரும் எதிர்பார்த்தனர். அத்தகைய செய்திகள்தான் தேர்தல் ஆணையத்தின் தரப்பில் இருந்தும் ஆரம்பத்தில் கசிய விடப்பட்டது.

ஆனால் உயர்நீதி மன்றத் தீர்ப்பை ஒரு புறம் வைத்துவிட்டு, அதற்குக் கீழான மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் வழிகாட்டல்படி – அதன் உத்தரவுப் பிரகாரம் – அது கூறிய வேட்பு மனுக்களை ஏற்று, வாயை மூடிக்கொண்டு தேர்தலை நடத்தி முடியுங்கள் எனத் தேர்தல் ஆணையத்துக்கு சட்டமா அதிபர் திணைக்களம் வழிகாட்டல் வழங்கி இருப்பதாகத் தெரிகின்றது.

ஆனால் தேர்தல் ஆணையம் சுயாதீனமான ஒரு கட்டமைப்பு. தேவைப்பட்டால் அது தன்னுடைய கருத்து நிலைப்பாட்டை நீதிமன்றத்துக்கு தெரிவிப்பதற்காக சட்டமா அதிபருக்கு வெளியில் உள்ள நிபுணத்துவ சட்டத்தரணிகளின் உதவியை நாட முடியும். இதுவரை செயற்பட்ட முன்னைய தேர்தல் ஆணையங்கள் அப்படிக் காரியமாற்றிருக்கின்றன. (அது பற்றிய விடயங்கள் இன்றைய இதழின் ஆசிரியர் தலையங்கத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.)

சட்டமும், நீதியும் ஒழுங்கு முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டு, ஜனநாயக கோட்பாடுகளுக்கு அமைய, அந்த விழுமியங்களுக்கு இசைவாக, தேர்தலை நடத்தி முடிப்பதுதான் தேர்தல் ஆணையத்தின் பங்கு பணி. அந்தப் பாங்கில் தேர்தலை நடத்தி முடிப்பதற்கு தேர்தல் ஆணையத்தில் இருக்கும் ஆணையாளர்கள் திடசங்கற்பமும் பற்றுறுதியும் உடையவர்களாக இருக்க வேண்டும்.

ஆனால்தற்போதையதேர்தல்ஆணையத்திடம் அது சற்றுக் குறைவாக இருப்பதாக இப்போது சந்தேகம் தோன்றியிருக்கின்றது.

உயர் நீதிமன்றுக்கு முரணாக மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்து எட்டு, பத்து நாள்கள் ஆகியும் அது தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யும் அசுமாத்தம் தேர்தல் ஆணையத்திடம் இல்லை.

நமக்கேன் வீண்வம்பு, சிரமம் என்று கருதி மேன்முறையீடு செய்யாமல், உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு மாறான மேன்முறையீட்டு நீதிமன்ற வழிகாட்டல் படி தேர்தல் ஆணையம் நடந்து கொள்ளப் போகின்றது என்ற சந்தேகம் பலதரப்புகளுக்கும் வந்துள்ளது.

எது, எப்படியாயினும் இன்று காலை தேர்தல் ஆணையம் கூடுகிறது.

அப்போது இந்த ஆணையத்தின் முதுகெலும்பு பற்றிய வண்டவாளம் அம்பலமாகும் என எதிர்பார்க்கலாம்.

---

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதன்படி, 2025 உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முதலில் நிராகரிக்கப்பட்ட இந்த வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் சம்பந்தப்பட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டது.

---

## டிப்பர் மோதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த விபத்துச் சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற சென்ற வடமராட்சி கிழக்கு, மாமுனை, செம்பியன்பற்றைச் சேர்ந்த 39 வயதான ஜேந்தீஸ்வரன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

விபத்துக்குள்ளான நபரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் டிப்பர் சாரதியை மருதங்கேணி பொலிஸார் கைது செய்துள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

# வீழ்ச்சியைப் பதிவு செய்த கொழும்பு பங்கு சந்தை

கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் நேற்று வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 54.63 புள்ளிகளால் வீழ்ச்சியடைந்துள்ளது.

கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் இன்று 15,526.20 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

அத்துடன் கொழும்பு பங்குச் சந்தையின் மொத்தப் புரள்வானது நேற்று 1.6 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## திராணியற்ற தேர்தல் ஆணையம்

உள்ளூராட்சித் தேர்தல் என்றாலேயே குழப்பம்தான் என்ற மாதிரி நிலைமையாகி விட்டது.

ஏற்கனவே இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்தத் தேர்தல் அறிவிக்கப்பட்டு, வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பகுதி அளவில் வாக்கு சீட்டுகளும் அச்சிடப்பட்டு, தேர்தல் ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த போது அப்போதைய அரசின் சதித் திட்டக் கால்வாரலால் வாக்களிப்புத் திகதி இரண்டு, மூன்று தடவைகள் ஒத்திவைக்கப்பட்டு, கடைசியாகத் தேர்தல்கள் நடைபெறாமலேயே போயிற்று.

அச்சமயத்திலும் தேர்தல் ஆணையம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் அப்போதைய அரசுடனும் தேர்தலை நடத்தி முடிக்க மல்லுக் கட்டி சட்டப் போராட்டம் நடத்தியது.

தேர்தல் ஆணையம் சுயாதீனமான அதிகாரங்கள் கொண்ட ஒரு கட்டமைப்பாக அரசமைப்புத் திருத்தங்கள் மூலம் உருவாக்கப்பட்டிருப்பதால், அது அப்போது அரசுத் தலைமையுடனும் முண்டி நின்று, எப்படியேனும் அத்தேர்தலை நேர்சீராக நடத்தி முடித்துவிடும் தன்னுடைய வரலாற்றுப் பொறுப்பை நிறைவேற்ற மிக உறுதியாக நின்று முயன்றது. தேர்தலை நீதியாக - உரிய காலத்தில் - நடத்தி முடிக்கும் தனது திடசங்கற்பம் காரணமாக, தன்னுடைய நிலைப்பாட்டை முன்னெடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் தன்னுடன் இணங்கி வராத சூழலில், வெளி சட்டத்தரணிகளை நிபுணத்துவ சேவைக்கு அமர்த்தி, வழக்காடியது. அந்தத் தேர்தலை நடத்தத் தன்னால் இயன்றவரை முயற்சித்தது. ஆயினும் அத்தேர்தலுக்கான நிதியை வெட்டி, அத்தேர்தலுக்கு ஆப்படித்தார் அப்போதைய நிதியமைச்சருமான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஆனால் இப்போதைய தேர்தல் ஆணையம், இந்த உள்ளூராட்சித் தேர்தலை அறிவித்துவிட்டு, தேர்தலை நடத்துவதற்கு அரசு தரப்பில் இருந்து முழு ஒத்துழைப்பும் கிடைத்த போதிலும், தன்னுடைய சுய அதிகாரத்தையும் சுயாதிபத்தியத்தையும் நிலைநாட்டி தேர்தலை ஒழுங்காக நடத்துவதில் தெளிவோடு நடந்து கொள்வதாகத் தெரியவில்லை.

தேர்தல் சட்ட வியாக்கியானம் தொடர்பில் தேர்தல் ஆணையத்துக்கும் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கும் இடையில் முரண்பாடு முற்றி இருப்பதாகத் தெரிகிறது. அதனால் இந்தத் தேர்தல் வேட்புமனுக்கள் நிராகரிப்பு ஆட்சேபனை தொடர்பான வழக்குகளில் தேர்தல் ஆணையத்தோடு சட்டமா அதிபர் திணைக்களம் முரண்பட்டு நிற்க, தன்னுடைய சுயநிலை பாட்டை நீதிமன்றத்தில் வெளிப்படுத்த முடியாமல் தேர்தல் ஆணையம் தள்ளாடுவதாக - தடுமாறுவதாக - தெரிகிறது.

உயர் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு மாறாக - முற்றிலும் முரணாக - அடுத்த நிலை நீதிமன்றமான மேன்முறையீட்டு நீதிமன்றம் நிலைப்பாடு எடுத்து, தேர்தலையொட்டி தீர்ப்பு வழங்கியிருப்பதாகத் தெரிகிறது. அந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொண்டு செயல்படும்படி சட்டமா அதிபர் திணைக்களம் கொடுக்கும் அழுத்தத்திற்கு சுயாதீன தேர்தல் ஆணையம் கட்டுப்படுவது என்பது அதன் தனித்துவத்துக்கே பெரும் இழுக்காகும்.

சுயாதீன தேர்தல் ஆணையம் தன்னுடைய முழு அதிகாரத்தையும் பிரயோகிக்க முதுகெலும்பு இல்லை என்று கருதினால் அந்த ஆணையத்தின் ஆணையர்கள் தாங்களாகவே பதவி விலகுவதுதான் இந்த நாட்டுக்கும் ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாப்பதற்கும் செய்யக்கூடிய நல்ல காரியமாக இருக்கும்.

உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு மாறான அடிப்படையில் - முற்றிலும் முரணான வகையில் - மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கி இருக்கின்ற தீர்ப்பை, ஜனநாயக சட்ட விழுமியங்களை புரிந்து கொண்டுள்ள தேர்தல் ஆணையம் ஏற்றுச் செயல்படக் கூடாது. நிச்சயமாக உயர்நீதிமன்றத்திடம் மேன்முறையீடு செய்து, சட்டத்தையும் தேர்தல் முறைமைகளையும் ஒழுங்கு முறையாகப் பேணி அது தேர்தல்களை நடத்தி முடிக்க வேண்டும்.

அப்படி நடத்துவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் தனக்கு ஒத்துழைக்காவிட்டால், வெளி சட்ட நிபுணர்களின் சேவையை அது பெற்றுக் கொள்ள முடியும். இதற்கு முந்தைய தேர்தல் ஆணையங்கள் அப்படித்தான் செயல்பட்டிருக்கின்றன.

இந்தத் தேர்தல் ஆணையம் என்ன செய்யப் போகின்றது? இன்று காலை அதன் கூட்டத்தில் அது என்ன முடிவு எடுக்கப் போகின்றது? முதுகெலும்பு உள்ள தேர்தல் ஆணையம் என்று அது தன்னை நிரூபிக்குமா? அது இன்று தெரியும். அதன் பின் அதன் செயற்பாடுகளை மேலும் அம்பலப்படுத்துவோம்.

# பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலத்தில் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன கையொப்பம்!

பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலத்தில் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன கையொப்பமிட்டு அதனை சான்றுறுதிப்படுத்தியுள்ளதாக நாடாளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு விவாதம் கடந்த 9ஆம் திகதி நாடாளுமன்றில் இடம்பெற்றதுடன் குழு நிலை விவாதத்தில் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து வாக்கெடுப்பின்றி குறித்த சட்டமூலம் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

அதற்கமைய இந்த சட்டமூலம் 2025ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க பெறுமதி சேர் வரி திருத்தச் சட்டமாக அமுலுக்கு வருமென நாடாளுமன்றத் தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது






# அமெரிக்க பொருள்களுக்கான வரியை 125 வீதமாக உயர்த்தியது சீன அரசு

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சீனப் பொருள் களுக்கான வரிகளை 145 வீதமாக உயர்த்தியதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், சீனா நேற்று அமெரிக்க இறக்குமதி கள் மீதான வரிகளை 125 வீதமாக உயர்த்தியது.

இது உலகளாவிய விநியோகச் சங்கிலிகளை முடிவுக்குக் கொண்டுவர அச்சுறுத்தும் வர்த்தகப் போரில் பங்குகளை உயர்த்தியது.

உலகின் 2 ஆவது பெரிய பொருளாதார நாடாகவும், அமெரிக்க இறக்குமதிகளை வழங்கும் இரண்டாவது பெரிய நாடாகவும் இருக்கும் சீனாவின் மீது கூடுதல் கட்டண உயர்வுக்கு வெள்ளை மாளிகை அழுத்தம் கொடுத்ததைத் தொடர்ந்து, பல நாடுகள் மீது விதிக்கப்பட்ட பரஸ்பர வரிக ளில் பெரும்பாலானவற்றை இடைநிறுத்திய பின்னர் இந்த உயர்வு வந்துள்ளது.

இது குறித்த அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ள சீனா வின் நிதி அமைச்சகம்,

“சீனா மீது அமெரிக்கா விதித்த அசாதாரணமான அதிக வரிகள் சர்வதேச மற்றும் பொருளாதார வர்த்தக விதிகள், அடிப்படை பொருளாதார சட்டங்கள் மற்றும் பொது விதியை கடுமையாக மீறுகிறது.

மேலும் இது முற்றிலும் ஒருதலைப்பட்சமான அச்சுறுத்தல் மற்றும் வற்புறுத்தலாகும்.” என்று கூறியுள்ளது.



# மியன்மாரில் நேற்று மீண்டும் நிலஅதிர்வு

மியன்மாரில் நேற்று மீண்டும் நில அதிர்வு ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று காலை 4.1 மெக்னிடியூட் இந்த நிலஅதிர்வு ஏற்பட்டுள்ளது.

உயிர் சேதம் மற்றும் பொருள் சேதம் குறித்து எந்த தகவலும் வெளியாக வில்லை என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.





# உக்ரைனுக்கு 5,000 கோடி ரூபா மதிப்பிலான உதவிகளை வழங்கின ஐரோப்பிய நாடுகள்

உக்ரைனுக்கு 5,000 கோடி ரூபா (இந்திய நாணயப்படி) மதிப்பிலான இராணுவ உதவிகளை ஐரோப்பிய நாடுகள் வழங்கியுள்ளன என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மூன்று வருடங்களை கடந்தும் தொடர்ந்து வரும் உக்ரைன் – ரஷ்யா நாடுகளுக்கிடையிலான போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முயற்சித்து வருகிறார்.

இந்நிலையில் உக்ரைனுக்கு 5,000 கோடி ரூபா மதிப்பிலான இராணுவ உதவிகளை பிரித்தானியா தலைமையிலான உக்ரைனுக்கான சர்வதேச நிதியம் வழங்கியுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு அழுத்தம் கொடுக்கும் விதமாக, இந்த முடிவை எடுத்துள்ளதாக பிரித்தானியாவின் பாதுகாப்பு செயலாளர் ஜோன் ஹீலி தெரிவித்துள்ளார்.

வழங்கப்பட்ட 5,000 கோடியில் 3,500 கோடி ரூபாவை பிரித்தானியா வழங்கியதாகவும் எஞ்சிய தொகையை உக்ரைனுக்கான சர்வதேச நிதியத்தின் மூலம் நேர்வே வழங்கியுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# அமெரிக்க வரி விதிப்புக்கு இலங்கை சர்வதேச ரீதியிலான பதிலை உருவாக்க வேண்டும்: வெரிட்டே ரிசேர்ச் வலியுறுத்து

அமெரிக்காவின் பரஸ்பர வரி விதிப்புக்கு எதிராகத் தனித்தனியாகப் பிரச்சாரங்களை மேற்கொள்வதற்குப் பதிலாகச் சர்வதேச ரீதியிலான பதிலளிப்புக்கு இலங்கை செல்ல வேண்டும் என வெரிட்டே ரிசேர்ச் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம், அமெரிக்காவின் வரி விதிப்புக்கு எதிராக உலகளாவிய தரப்புடன் இணைந்து பொதுவான பதிலை உருவாக்க வேண்டும் என அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்காவின் வரி விதிப்பானது, உலக வர்த்தக ஸ்தாபனத்தின் விதிகளிலிருந்து விலகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக வர்த்தக ஸ்தாபனத்தில் 166 நாடுகள் அங்கம் வகிக்கின்ற நிலையில் அந்த நாடுகள் சுமார் 98 சதவீத சர்வதேச வர்த்தகத்தை உள்ளடக்கியுள்ளன.

தற்போது நாடுகள் தனித்தனியாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகின்ற போதிலும் சகல தரப்பும் இணைந்து பலதரப்பு அணுகுமுறையை உருவாக்க வேண்டும் என வெரிட்டே ரிசேர்ச் தெரிவித்துள்ளது.



# உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இதுவரை 1,121 முறைப்பாடுகள் பதிவு!

2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் இதுவரை 1,121 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 06 முறைப்பாடுகளும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 1,062 முறைப்பாடுகளும் ஏனைய விடங்கள் தொடர்பில் 53 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன என தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.






# கேப்பாபிலவு மக்களின் காணிப் பிரச்சினைக்கு தீர்வு கோரி அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு

(பா.சதீசன்)

முல்லைத்தீவு கேப்பாபிலவில் இராணுவத்தினர் வசமுள்ள தமது சொந்தக் காணிகளை விடுவிக்க கோரி நேற்று வெள்ளிக்கிழமை கேப்பாபிலவு கிராம மக்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு சென்று அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்திருக்கின்றனர்.

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மக்கள் தமது காணிகளை விரைவில் விடுவிக்கக்கோரி முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரிடமும், மற்றும் உயர் அதிகாரிகளிடமும் கடந்த வருடம் மகஜர் ஒன்றைக் கையளித்திருந்தனர். அதற்கு தீர்வுகள் கிடைக்க பெறாத நிலையில் நேற்று முன்தினம் கேப்பாபிலவு மக்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு சென்று ஜனாதிபதியினுடைய சிரேஷ்ட உதவி செயலாளரைச் சந்தித்து கலந்துரையாடினர். அப்போது காணிகளை விடுவிப்பது தொடர்பில் ஆவணங்கள் தம்மிடம் கிடைக்கவில்லை எனக் கூறியிருந்தனர். இதனையடுத்தே நேற்றையதினம் கேப்பாபிலவு மக்கள் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரனிடம் ஜனாதிபதி செயலகத்தில் கூறப்பட்ட விடயங்களை குறிப்பிட்டு அரச அதிபரிடம் புதிய மகஜரை கையளித்தனர்.

இதன்போது முல்லை மாவட்ட அரச அதிபர் கேப்பாபிலவு காணி தொடர்பாக ஜனாதிபதி செயலகத்திற்குத் தம்மால் அனுப்பி வைக்கப்பட்ட மகஜரினையும், அதற்கான பதில் கடிதத்தையும் கேப்பாபிலவு மக்களுக்குக் காண்பித்து அது தொடர்பாக தெளிவுபடுத்தியிருந்தார்.

கேப்பாப்பிலவு மக்களின் ஒருபகுதியினரின் காணிகள் விடுவிக்கப்பட்ட போதிலும் பாடசாலை, ஆரம்ப சுகாதார நிலையம், ஆலயங்கள், தேவாலயம், பொதுநோக்கு மண்டபம் உள்ளிட்ட மக்களின் குடியிருப்புக்கள் இன்னும் இராணுவக் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றன. குறிப்பாக மக்களின் பயன்தரு தென்னை மரங்கள் பல இந்தக் காணியிலேயே காணப்படுகின்றன. 62 நபர்களின் 171 ஏக்கர் காணிகள் தற்போது விடுவிக்கப்படாது இருக்கின்றன என மக்கள் தெரிவிக்கின்றனர்.

பல வருடகாலமாக தாம் தமது காணிகளை இழந்து சிரமங்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர் என்றும், பல போராட்டங்கள் செய்தும் இதுவரை தீர்வு இல்லை என்றும் அவர்கள் கூறுகின்றனர். தமது காணிகளை விரைவில் விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும், தவறினால் மீண்டும் தொடர் போராட்டங்களில் ஈடுபடவுள்ளோம் என தெரிவித்திருந்த நிலையிலே நேற்றையதினம் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரனிடம் புதிய மகஜர் ஒன்றினை கையளித்துள்ளனர்.

அத்தோடு எதிர்வரும் 26 ஆம் திகதி ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா முல்லைத்தீவு புதுக்குடியிருப்பிற்கு வருகைதர இருப்பதனால் அவரிடமும் கேப்பாபிலவு மக்கள் மகஜரினை கையளிக்கத் திட்டமிட்டுள்ளனர்.



# மட்டு. நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றின் ஆவணங்களைத் திருடிய நீதிமன்ற ஊழியர், மணல் வியாபாரிக்கு 21 வரை விளக்கமறியல்

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் பதிவேட்டு அறையில் இருந்து வழக்கு ஆவணக் கோப்பு ஒன்றைத் திருடி அதில் இருந்த வாகனப் பதிவு ஆவணத்தை வேறு ஒருவரின் பெயருக்கு மாற்றித் திரும்பவும் பதிவேட்டு அறையில் வைத்த சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட நீதிமன்றில் கடமையாற்றி வந்த சிற்றூழியர் ஒருவரையும் மணல் வியாபாரி ஒருவரையும் தொடர்ந்து எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டு. நீதிவான் கடந்த திங்கட்கிழமை 7 ஆம் திகதி உத்தரவிட்டார்.

இது பற்றி தெரியவருவதாவது:-

மேற்படி நீதிமன்றப் பதிவேட்டு அறையில் வைக்கப்பட்டிருந்த 4 ஆவணக் கோப்புக்கள் கொண்ட ஆவணங்கள் திருட்டுப் போயுள்ளம்சியையடுத்து பொலிஸாருக்குச் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்த நிலையில் திருட்டுப் போன வாகன வழக்கு தொடர்பான ஆவணக் கோப்பு அடங்கிய ஆவணங்களை அங்கு கடமையாற்றி வந்த ஊழியர் ஒருவர் மணல் வியாபாரியுடன் இணைந்து அந்த வழக்கு ஆவணக் கோப்புக்களை அங்கிருந்து திருடிச் சென்று, அந்த ஆவணக் கோப்பில் இருந்த ஆவணங்களை எடுத்து விட்டு, அதில் தனது பெயருக்கு மாற்றிய வாகன பதிவு ஆவணங்களை மாற்றீடு செய்து, மீண்டும் பதிவேட்டு அறையில் வைக்கப்பட்டுள்ளமையைப் பொலிஸார் கண்டறிந்தனர்.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட ஊழியரையும் மணல் வியாபாரியையும் பொலிஸார் கடந்த மார்ச் 12 ஆம் திகதி கைது செய்து, மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து அவர்களை கடந்த 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். மீண்டும கடந்த 7 ஆம் திகதி நீதிமன்றில் இருவரையும் ஆஜர்படுத்திய போது வழக்கை விசாரணைக்கு எடுத்த நீதவான் இருவரையும் மீண்டும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் ஊக்குவிப்புடன் மட்டக்களப்பில் கமுகு உற்பத்தியின் அறுவடை நிகழ்வு








**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

நாட்டில் இருந்து ஏற்றுமதிசெய்யப்படும் பல்வேறு விவசாய உற்பத்திகளில் ஒன்றாக மட்டக்களப்பு மாவட்டத்தில் கமுகு உற்பத்தி ஊக்குவிக்கப்படுகின்றது. இக்கமுகு அறுவடை விழா - 2025 அங்கு நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஏற்றுமதி விவசாய திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட விரிவாக்கல் உத்தியோகத்தர் நர்த்தனா குகதாசன் ஏற்பாட்டில் மாவட்ட செயலாளர் ஜே.ஜே. முரளிதரன் தலைமையில் போரதீவுப்பற்று வம்மியடியூற்று கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள ஏ.பிரபாகரன் என்பவரது வீட்டுத் தோட்டக் காணியில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் சோ.ரங்கநாதன், உதவிப் பிரதேச செயலாளர் வி.துலாஞ்சனன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எம்.எப்.ஏ. சனீர் ஆகியோர் பங்குபற்றி கமுகுகளின் அறுவடையை ஆரம்பித்து வைத்தனர்.

இதன்போது 2019 ஆம் ஆண்டு ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கமுகு மரங்களின் பயனாகக் காய்த்த கமுகுகள் அறுவடை செய்யப்பட்டன.

இதேவேளை, 2025 ஆம் ஆண்டு இஞ்சி, மஞ்சள் மற்றும் 26,500 கமுகு கன்றுகள், 1000 மிளகு செடி, 1000 கொறுக்காய் கன்றுகள் என்பவற்றைப் பயிரிடுவதற்கு ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் உத்தேசித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வம்மியடியூற்று பொருளாதார அபிவிருத்தி, கிராம உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், அப்பகுதி விவசாயிகள் கலந்து கொண்டனர்.



# பொகவந்தலாவ செல்வகந்த தோட்டத்தில் முத்துமாரியம்மன் கும்பாபிஷேகப் பெருவிழா

(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)

பொகவந்தலாவ செல்வகந்த தோட்டம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய புணராவர்தன அஷ்ட பந்தன நவகுண்ட பக்ஸ மகாகும்பாபிசேக பெருஞ்சாந்திப் பெருவிழா நேற்று வெள்ளிக்கிழமை வெகுவிமரிசையாக இடம்பெற்றது.

அதிகாலை 01மணிக்கு விநாயகர் வழிபாடு, பூஜை, நவகுண்ட பூஜை, தீபாராதனை, தேமந்திர தோஸ்த்திரம், விசேட பூஜை இடம்பெற்று, சுப மூகூர்த்தில் மஹாகும்பாபிஷேகம் பரிவார மூர்த்திகளுக்கு விசேட கிரியைகளும் பூஜைகளும் இடம்பெற்றதன் பின்னர் மூலஸ்தான கோபுரம் மற்றும் இராஜகோபுரம் ஆகியவற்றுக்கு சுப நேரத்தில் தீர்த்தம் ஊற்றப்பட்டது.

இந்த மகாகும்பாபிசேக கிரியைகள் பொகவந்தலாவ ஸ்ரீ தண்டாயுதபாணி ஆலய பிரதான குரு பிரதிஸ்டா கிரியா ரத்தினம் கிரியா ஜோதி பிரதிஸ்டா ஜோதி ஆகம பிரவீணன் சிவ ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெற்றன. பெருந்திரளான பக்த அடியார்களும் கலந்து கொண்டனர். இதேவேளை பக்த அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கி வைக்கப்பட்டது.













# ஓமந்தை விளையாட்டு அரங்கை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை

## விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே தெரிவிப்பு



(கி.வசந்தன்)

வவுனியா, ஓமந்தை விளையாட்டு அரங்கை மேலும் விரிவுபடுத்தி சர்வதேச தரத்திற்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் சுனில் குமார கமகே தெரிவித்துள்ளார்.

வவுனியா, ஓமந்தையில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு அரங்குக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் அதன் தேவைப்பாடுகள் மற்றும் செயற்பாடுகள் குறித்து கேட்டறிந்து கொண்டார். அதன் பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

வன்னி மாவட்டத்தில் சர்வதேச தரத்திலான விளையாட்டு அரங்கு ஓமந்தையில் அமைந்துள்ளது. அங்கு பல தேவைகள் காணப்படுகின்றன. பயிற்சிகளை வழங்குவதற்கான பயிற்றுவிப்பாளர்கள், பயிற்சிக்கான உபகரணங்கள் எனப் பல தேவைப்பாடுகள் இருக்கின்றன. அவற்றை எதிர்வரும் காலங்களில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வடமாகாணத்தில் உள்ளக விளையாட்டுப் பயிற்சிகள் மற்றும் மெய்வன்மைப் பயிற்சிகள் என்பவற்றை எதிர்காலத்தில் வழங்கக் கூடியதாக இருக்கும். இந்தப் பிரதேசத்தில் நீச்சல் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

விளையாட்டுத் துறையை வவுனியா மாவட்டத்தில் சிறப்பாக முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இளைஞர்களிடையே காணப்படுகின்ற தீய பழக்க வழக்கங்கள், மது பாவனை, தொலைபேசிப் பாவனை, போதைப் பொருள் பாவனை என்பவற்றை கட்டுப்படுத்துவதற்கு விளையாட்டு துறை அவசியம். அந்த வகையில் இந்த விளையாட்டு அரங்கை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும். – எனத் தெரிவித்தார்.

இதன்போது, அமைச்சருடன் கூட்டுறவுத் துறை பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் ஆகியோரும் விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# திருக்கோணேஸ்வரத்தில் நேற்றுக் கொடியேற்றம்











திருக்கோணேஸ்வரம் பிரம்மோற்சவத்தை ஒட்டிய கொடியேற்ற வைபவம் நேற்றுக்காலை பிரதம குருக்கள் சிவஸ்ரீ கிரிஹரக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

குருக்கள் கொடியேற்றி வைப்பதையும் கலந்து கொண்ட பக்தர்களையும், விநாயகப் பெருமான், மாதுமையம்பாள் சமேத கோணேஸவரப் பெருமான் வீதியுலா வரும் காட்சியையும் காணலாம்.



# மக்கள் சந்திப்புக்காக மன்னாருக்கு பஸ்ஸிலேயே பயணம் செய்து வந்து திரும்பும் பிரதி அமைச்சர்!




( வாஸ் கூஞ்ஞ )

இன்றைய அரசின் நோக்கம் மக்களின் வரிகளை கொண்டு அரசியல் வாதிகள் சுகபோகம் அடையாது மக்களின் வரிப்பணம் மக்களின் வாழ்வாதாரத்துக்கு பயன்பட வேண்டும் என்பதுதான். இதனால்தான் அன்றைய அரசுகள் செய்ததைப் போன்று வீண் செலவு செய்யாது நான் பிரதி அமைச்சராக இருந்தும் அரசியல் நோக்காகக் கொண்டு கொழும்பிலிருந்து மன்னாருக்கு பஸ்ஸிலேயே பயணித்து வந்தேன் என பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

மன்னாரில் மக்கள் சந்திப்பை முன்னெடுக்கும் நோக்குடன் பெருந்தோட்ட மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மன்னாருக்கு வருகை தந்து மன்னார் தீவிலுள்ள தலைமன்னார், நடுக்குடா, துள்ளுக்குடியிருப்பு, முருகன் கோவில், பேசாலை நகர், சிறுத்தோப்பு, சின்னக் கரிசல், கொன்னையன் குடியிருப்பு, எழுத்தூர், தரவன் கோட்டை மற்றும் பள்ளிமுனை ஆகிய பகுதிகளுக்குச் சென்று மக்கள் சந்திப்பை மேற்கொண்டார்.

இதன்போது அவர் மக்கள் மத்தியில் உரையாற்றும்போது கூறியவை வருமாறு:-

கடந்த ஆண்டு 2024 இல் ஒரு பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பது எமக்குத் தெரியும். இந்த அரசியல் மாற்றத்துடன் அரசியல் கலாசாரத்திலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்த நாட்டிலுள்ள பொது மக்கள் வருடந்தோறும் வரிகளையும் செலுத்தி வருகின்றனர். பொது மக்களின் வரிகளை கடந்தகால அரசை ஆண்ட அரசியல் தலைவர்கள் தங்கள் சுகபோகங்களுக்காகவே பெருமளவு செலவழித்துள்ளனர்.

ஓர் அமைச்சர் ஒரு இடத்திற்கு செல்லுகின்றார் என்றால் அவருடன் பெருந்தொகை பாதுகாப்பும் வாகனங்களும் பின் தொடரும்.

ஆனால் இந்த கலாச்சாரம் இன்று மாற்றம் அடைந்துள்ளது.

நான் இன்று மன்னாருக்கு வந்திருக்கின்றேன் என்றால் இன்று எனது அமைச்சின் வாகனத்தை பாவிக்கவில்லை. மாறாக பிரதி அமைச்சராக இருந்தும் கொழும்பிலிருந்து மன்னாருக்கு பஸ்ஸிலேயே வந்து, இங்கு உள்ளூருக்குள் ஒரு தனியார் வாகனத்தில் பயணித்து வருகின்றேன்.

இதற்கு காரணம் பொது மக்களின் பணத்தை எங்கள் சுகபோகத்திற்காக செலவழிக்கக் கூடாது என்பதற்காகவே. நாங்கள் இதை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். இதுதான் எங்கள் கட்சி.

மக்களின் பணத்தை எங்கள் விருப்பப்படி செலவு செய்ய எங்களுக்க அதிகாரம் கிடையாது.

மக்களின் பணம் தெய்வத்திற்குரியது போன்றது என எங்கள் ஜனாதிபதி அநுரா தெரிவித்திருக்கின்றார்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்து என்ன மாற்றத்தைக் கண்டுள்ளார்கள் என்று சிலர் கேட்கின்றார்கள். நடைபெற்றுக் கொண்டிருக்கும் மாற்றங்களில் இதுவும் ஒன்று.

எங்கள் ஜனாதிபதி எங்குச் சென்றாலும் முன்னைய ஜனாதிபதிகள் போன்று ஆடம்பரமாக செயல்படவில்லை. எளிமையான முறையிலேயே செயல்படுகின்றார். இவ்வாறான மாற்றத்திற்காகத்தான் மக்கள் தேசிய மக்கள் சக்தி கட்சிக்கு வாக்களித்தார்கள்.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து ஆட்சிபுரிந்தவர்கள் பெரும் பெரும் புள்ளிகளே. ஓர் ஏழை மகன் ஆட்சிபரிய அவர்கள் இடம் கொடுக்கவில்லை. ஒன்று நீலம் அல்லது பச்சை கட்சிகளே ஆதிக்கம் செலுத்தி வந்தன.

ஆனால் இன்று இது மாற்றம் அடைந்துள்ளது. ஒரு சாதாரண விவசாயின் மகனை இன்று மக்கள் ஆட்சிப்பீடம் ஏற்றியுள்ளனர்.

மக்கள் கொடுத்த ஆணைக்கு களங்கம் ஏற்படாவண்ணம் ஜனாதிபதி தற்பொழுது தனது ஆட்சியை அவர் முன்னெடுத்துச் செல்லுகின்றார்.

இன்று மத வாதம், இனப் பிரச்சினை தோன்றா வண்ணம் முடிவுகட்டப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்துக்கு இம்முறை வரவு - செலவு திட்டத்தில் அபிவிருத்திக்காக அதிக பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் சொகுசாக இருப்தற்கு வாகன இறக்குமதி செய்ய சலுகை இருந்தது. ஆனால் மன்னார் மாவட்டத்தில் மாணவர்கள் பாடசாலைகளுக்கு போவதற்கு தகுந்த போக்குவரத்து இல்லை.

இன்று இந்த சலுகைகள் நிறுத்தப்பட்டு மக்கள் நலன் நோக்கிய செயல்பாட்டை இந்த அரசு முன்னெடுத்து வருகின்றது.

கொலைகளுக்கு உடந்தையாக இருந்தவர்கள், ஊழல் புரிந்தவர்கள் யாவரும் தண்டனைகளுக்கு உள்ளாகி வருவதை நீங்கள் இப்பொழுது பார்க்கின்றீர்கள்.

எமது நாட்டில் பொருளாதாரம் வளர்ச்சிக் கண்டு வருகின்றது. எமது கிராமங்களும் மேலும் வளர்ச்சிக் காண உள்ளூராட்சி மன்றங்களுக்கும் எமது கட்சி தெரிவாக யாவரும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும். - என இவ்வாறு தெரிவித்தார்.



# புலிபாய்ந்தகல்லில் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள வாடியை அகற்றுமாறு பிரதேச செயலர் அறிவிப்பு!

## அதை அமைத்த சந்தேகநபருக்கு எதிராக சட்டநடவடிக்கை



(பா.சதீசன்)

முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள, புலிபாய்ந்த கல் பகுதியில் தமிழ் மக்களின் பூர்வீக மீனவ வாடிகளை அகற்றிவிட்டு, அந்த இடத்தில் அனுமதி எதையும் பெறாது அத்துமீறி பெரும்பான்மை இனத்தவர்களால் அமைக்கப்பட்ட வாடிகளை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்திய நிலையில், கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் திருமதி. மஞ்சுளாதேவி சதீசன் அந்தப் பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள வாடிகளை அகற்றுமாறு அங்கு நேற்று அறிவித்தலைக் காட்சிப்படுத்தியுள்ளார்.

அத்தோடு அப்பகுதியில் அத்துமீறி வாடி அமைத்த சந்தேகநபராக இனங்காணப்பட்ட டபிள்யூ.எல்.நிசாந்த என்னும் பெரும்பான்மை இனத்தவருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மேலும் கூறப்படுபவை வருமாறு:–

தமிழ் மீனவர்கள் பன்நெடுங்காலமாக மீன்பிடியில் ஈடுபட்டுவரும் முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் புலிபாய்ந்த கல் பகுதியை ஆக்கிரமித்து அங்கு வாடிஅமைப்பதற்கு பெரும்பான்மையின மீனவர்கள் தொடர்ந்து முனைப்பு காட்டி வருகின்றனர்.

அந்தவகையில் கடந்தவருடமும் அத்துமீறி அந்தப் பகுதியில் வாடிஅமைப்பதற்கு சில மீனவர்கள் முயற்சி மேற்கொண்டிருந்தனர். இந் நிலையில் அப்பகுதி மீனவர்கள் மற்றும் வன்னி மாவட்ட தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோர் இணைந்து அந்த அத்துமீறல் நடவடிக்கையை அப்போது தடுத்து நிறுத்தியிருந்தனர்.

இத்தகைய சூழலில் மீளவும், கடந்த 02.04.2025 அன்று அதே புலிபாய்ந்த கல் பகுதியில் தென்னிலங்கையைச் சேர்ந்த சில பெரும்பான்மையின மீனவர்கள், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத் திடமோ, கரைதுறைப்பற்று பிரதேச செயலகக் காணிப் பிரிவிடமோ எவ்வித அனுமதியையும் பெறாது அத்துமீறி வாடிகளை அமைத்திருந்தனர்.

அத்தோடு புலிபாய்ந்தகல் பகுதியில் பூர்வீகமாக மீன்பிடியில் ஈடுபடும் சில தமிழ் மீனவர்களின் வாடிகளை அடாவடித்தனமாக அகற்றியே இவ்வாறு தென்னிலங்கை பெரும்பான்மையின மீனவர்களால் வாடி அமைக்கப்பட்டுமிருந்தது.

அப்பகுதியில் OFRP-A-5491 CHW என்னும் இலக்கமுடைய மீன்பிடிப் படகொன்றும் அனுமதி பெறப்படாமல் அப்பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி▼

# புலிபாய்ந்தகல்லில் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள வாடியை அகற்றுமாறு பிரதேச செயலர் அறிவிப்பு!






**தொடர்ச்சி▲**

இந் நிலையில் கொக்குத்தொடுவாய் கடற்றொழிலாளர் சங்கத்தின் அழைப்பை ஏற்று கடந்த 04.04.2025 அன்று அப்பகுதிக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நிலமைகளைப் பார்வையிட்டமையுடன், அப்பகுதியில் பெரும்பான்மையின தென்னிலங்கை மீனவர்களால் அத்துமீறி வாடி அமைக்கப்பட்டமை தொடர்பில் கரைதுறைப்பற்று காணி உத்தியோகத்ருக்கு தெரியப்படுத்தி உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினார். அதேவேளை கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம அலுவலரையும் உடனடியாக அந்த இடத்திற்கு அழைத்து நிலமைகளைக் காண்பித்தார். அவரிடமும் இதுதொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் க.மோகனகுமாருடனும் தொலைபேசியில் தொடர்பினை ஏற்படுத்தி, அனுமதியின்றி கரையே நிறுத்திவைக்கப்பட்டுள்ள படகுதொடர்பிலும் விரைந்து நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில் சர்ச்சைக்குரிய அந்த வாடிகளை உடனடியாக அங்கிருந்து அகற்றுமாறு கரைதுறைப்பற்று பிரதேச செயலக்காணிப் பிரிவால் அப்பகுதியில் துண்டுப்பிரசுரம் காட்சிப்படுத்தப்படுமென கரைதுறைப்பற்று பிரதேசசெயலக காணி உத்தியோகத்தரால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது. கொக்குத்தொடுவாய் கிராம அலுவலரும் இது தொடர்பில் உரிய இடங்களுக்கு தாம் தெரியப்படுத்துவார் எனவும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் தெரிவித்திருந்தார்.

அத்தோடு அனுமதிபெறப்படாது கரையே நிறுத்திவைக்கப்பட்டுள்ள குறித்த படகுதொடர்பில் தம்மால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் க.மோகனகுமார் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்களிம் தெரிவித்திருந்தார். இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்று இவ்விடயம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்து கரைதுறைப்பற்று பிரதேச செயலக காணி உத்தியோகத்தருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திக் கேட்டார். உடனடியாக புலிபாய்ந்த கல் பகுதியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட வாடியை அகற்ற அப்பகுதியில் அறிவித்தல்களை காட்சிப்படுத்துமாறும் வலியுறுத்தினார்.

இதனைத்தொடர்ந்து துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி.மஞ்சுளாதேவி சதீசன், கரைதுறைப்பற்று காணி உத்தியோகத்தர், கரைதுறைப்பற்று மேலதிக பிரதேச செயலாளர், கொக்குத்தொடுவாய் வடக்கு கிராமஅலுவலர் ஜெயபாலகுணசேகரன் சுஜீனோ ஆகியோர் அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்று நிலமைகளைப் பார்வையிட்டனர்.

அங்கு சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட சில வாடிகள் முழுமையாகவும், சில வாடிகள் பகுதியளவிலும் அகற்றப்பட்டுக் காணப்பட்டிருந்தன.

அதனைத் தொடர்ந்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள வாடிகளை முழுமையாக அகற்றுமாறு அறிவித்தல்களும் அப்பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டன.

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளரால் அப்பகுதியில் காட்சிப்படுத்தப்பட்ட அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

"கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள புலிபாய்ந்தகல் பிரதேசத்தில் காணப்படும் இக்காணியானது அரச காணியாகக் காணப்படுவதால் இப்பிரதேசத்தில் எமது அனுமதியின்றி வாடிகள் அமைத்தல் மற்றும் எவ்விதமான கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளவேண்டாம் என்பதனை தெரிவித்துக்கொள்வதுடன் மீறி வாடிகள், கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டில் தங்கள்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தங்களுக்கு தயவுடன் அறியத்தருகின்றேன்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந் நிலையில் குறித்த பகுதிக்கு வருகைதந்த டபிள்யூ.எல்.நிசாந்த என்பவர் தாமே அப்பகுதியில் வாடி அமைத்தார் எனத் தெரிவித்தார்.

இந் நிலையில் அரச காணியில் அனுமதியின்றி எவ்வாறு வாடி அமைத்தீர்கள் என குறித்த நபரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மற்றும், பிரதேசசெயலாளர் ஆகியோர் கேள்வி எழுப்பினர். கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் அந்த நபரிடம் பெயர், விவரங்களைப் பெற்றமையுடன் அவருக்கெதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

# எடப்பாடி தலைமையில் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி

## சென்னையில் அமித் ஷா அறிவிப்பு



2026 சட்டப்பேரவைத் தேர்தலை அ.தி.மு.க. – பா.ஜ.க. இணைந்த தேசிய ஜனநாயகக் கூட்டணி எதிர்கொள்ளும் என்றும் தமிழகத்தில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் இந்த கூட்டணி தேர்தலை எதிர்கொள்ளும் எனவும் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சென்னை கிண்டியில் உள்ள நட்சத்திர விடுதியில் அமித் ஷாவை, அ.தி.மு.க. தலைவர்கள் எடப்பாடி பழனிசாமி, கே.பி. முனுசாமி உள்ளிட்ட தலைவர்கள் சந்தித்துப் பேசினர். இதையடுத்து, செய்தியாளர்களைச் சந்தித்த அமித் ஷா தெரிவிக்கையில்,

“பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. தலைவர்கள் இணைந்து இந்தக் கூட்டணியை உருவாக்கி இருக்கிறார்கள். அ.தி.மு.க –பா.ஜ.க. மற்றும் பிற கட்சிகள் இணைந்த தேசிய ஜனநாயகக் கூட்டணி 2026 சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொள்ளும். இதை அறிவிக்கவே இந்த செய்தியாளர் சந்திப்பு.

இந்த கூட்டணி, தேசிய அளவில் மோடி தலைமையிலும், தமிழக அளவில் எடப்பாடி பழனிசாமி தலைமையிலும் செயல்படும். 1998 முதல் அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி இருந்து வருகிறது. இது ஒரு இயல்பான கூட்டணி. ஜெயலலிதா காலத்தில் இந்த கூட்டணி தமிழகத்தில் பல இடங்களில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருக்கிறது. ஒரு மக்களவைத் தேர்தலில் மொத்தமுள்ள 39 இடங்களில் 30 தொகுதிகளில் இக்கூட்டணி வெற்றி பெற்றிருக்கிறது.

வரப்போகும் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி மிகப் பெரிய வெற்றி பெற்று ஆட்சி அமைக்க இருக்கிறது. நாங்கள் இணைந்துதான் இங்கே ஆட்சி அமைக்கப் போகிறோம். கூட்டணி ஆட்சிதான் நடைபெற போகிறது. எடப்பாடி தலைமையில்தான் கூட்டணி இருக்கும். வெற்றி பெற்ற பிறகு மற்ற விஷயங்களை நாங்கள் சொல்கிறோம். இப்போது எவ்வித குழப்பத்தையும் தி.மு.க. ஏற்படுத்த நாங்கள் வாய்ப்பளிக்க மாட்டோம்.

கூட்டணி தொடர்பாக அ.தி.மு.க. நிபந்தனை ஏதும் விதித்துள்ளதா என கேட்கிறீர்கள். அ.தி.மு.க. எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை. அ.தி.மு.க. ஒன்றிணைய அழைப்பு விடுப்பீர்களா என கேட்கிறீர்கள். அ.தி.மு.கவின் உள்கட்சி விவகாரங்களில் நாங்கள் தலையிடப் போவதில்லை. தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு அ.தி.மு.க. வருவது இருவருக்குமே வெற்றியைத் தரும். யார் யாருக்கு எத்தனை தொகுதிகள் என்பதும் வெற்றி பெற்ற பிறகு எவ்வாறு ஆட்சி அமைப்பது என்பதும் பிறகு பேசப்படும். இப்போது அது பேசுபொருளாக இல்லை.

தி.மு.க. அரசு இந்து மதம், மும்மொழிக் கொள்கை, தொகுதி மறுவரையறை என பல பிரச்சினைகளை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஊழல், மோசடி போன்ற தங்கள் பிரச்சினைகளில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக இதுபோன்ற பிரச்சினைகளை அவர்கள் எழுப்புகிறார்கள். தி.மு.கவின் மிகப் பெரிய ஊழல்கள், மிகமோசமான சட்டம் ஒழுங்கு நிலை, தலித் மக்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல்கள், பெண்கள் மீதான தாக்குதல்கள் ஆகியவைதான் வரப்போகும் தேர்தலில் முக்கிய பேசுபொருளாக இருக்கும்.

தமிழ், தமிழ்நாடு, தமிழக மக்களை நாங்கள் கௌரவமாகக் கருதுகிறோம். பிரச்சினையாக பார்த்தது கிடையது. அதனாலதான், புதிய நாடாளுமன்ற திறப்பு விழாவின்போது பிரதமர் நரேந்திர மோடி தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தின் அங்கமான செங்கோலை, நாடாளுமன்றத்துக்குள் நிறுவினார். ஆனால், திமுக அதை எதிர்த்தது. காசி தமிழ் சங்கமம், சவுராஷ்ட்ர தமிழ் சங்கமம் ஆகியவற்றை மோடி அரசு பெருமிதத்துடன் நடத்துகிறது. தமிழகத்தின் சிலம்பம் விளையாட்டை கேலோ இந்தியா விளையாட்டில் இணைத்தவர் மோடி.

தமிழ்நாட்டில் தமிழ் மொழியை வளர்க்க இருக்கும் ஒரே நிறுவனம் செம்மொழி தமிழாய்வு நிறுவனம். இது மத்திய அரசு நிறுவனம். இதை

தொடர்ச்சி▼



# எடப்பாடி தலைமையில் அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி

தொடர்ச்சி▲

உருவாக்கியவர் பிரதமர் மோடி. ஹூஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் ஆராய்ச்சிக்கான இருக்கை உருவாக் கப்பட்டுள்ளது. திருக்குறள் உலகின் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறது. இதுவரை 63 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

மகாகவி பாரதியின் அத்தனை படைப்பு களையும் நூல்களாக வெளியிட்டி ருப்பவர் மோடி. இன்றைக்கு ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் தேர்வுகளை தமிழில் எழுத முடிகிறது. ஆனால், தி.மு.க. மத்தியில் ஆட்சியில் இருந்தபோது இந்த வாய்ப்பு இல்லை. மத்திய காவல் ஆயுதப் படைக் கான தேர்வு தற்போது தமிழில் எழுத முடிகிறது. முன்பு இந்தி மற்றும் ஆங்கி லத்தில் மட்டும்தான் எழுத முடிந்தது.

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் மருத்துவம் மற்றும் பொறியில் படிக்கும் மாணவர்கள், தங்கள் தாய் மொழியில் படிக்கிறாரகள். அதற்கான பாட புத்த கங்கள் அவர்களின் தாய் மொழியில் உருவாக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் மருத்துவம் மற்றும் பொறியியல் படிப் புக்கான பாட புத்தகங்களை தமிழில் உருவாக்க நான் கடந்த 3 ஆண்டுகளாக கூறி வருகிறேன். ஆனால், இதுவரை அதற்கான வேலை நடக்கவில்லை. தி.மு.க. தமிழுக்காக என்ன செய்தது என்பதை அவர்களால் பட்டியலிட முடியுமா?

பா.ஜ.க. மாநில தலைவர் மாற்றப் பட்ட பிறகுதான் அ.தி.மு.க, தேசிய ஜன நாயகக் கூட்டணியில் இணைந்துள்ளதா என்று கேட்கிறீர்கள். தற்போதும் அண்ணாமலைதான் பா.ஜ.கவின் மாநில தலைவர். உங்கள் கருத்தில் துளிகூட உண்மையில்லை. தற்போ தும் கூட அண்ணாமலைதான் மாநில தலைவராக என் அருகில் அமர்ந்திருக் கிறார்.” என்றார்.

# தி.மு.க. மேலும் வலிமை பெற உழைப்பேன்
## கடமை தொடரும் என்கிறார் திருச்சி சிவா



“தி.மு.க. தலைவர் எனக்கு கொடுத் திருக்கும், இந்த அங்கீகாரமானது, நான் இன்னும் மேலும் கடுமையாக கட்சிக்காக உழைத்து, இன்னும் பலரை கட்சியில் இணைத்து தி.மு.க. என்கிற இந்த தவிர்க்க முடியாத சக்தி மேலும் வலிமை பெற உழைப்ப தற்கானது. அதுவே என் கடமை. எனக்கு வழங்கப்பட்டிருக்கும் இந்தப் பத வியை, நான் ஒரு பொறுப்பாக கருதுகி றேன்.”

– இவ்வாறு அக்கட்சியின் புதிய துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா கூறியுள்ளார்.

தி.மு.க. துணைப் பொதுச் செய லாளர் பதவியிலிருந்து அமைச்சர் பொன்முடி விடுவிக்கப்பட்டு, அப் பொறுப்பில் திருச்சி சிவா நியமிக்கப் பட்டுள்ளார்.

இது தொடர்பாக சென்னையில் உள்ள கட்சித் தலைமை அலுவல கத்தில், செய்தியாளர்களைச் சந்தித்த திருச்சி சிவா கருத்து தெரிவிக் கையில்,

“உழைப்புக்கு எப்போதும் அங்கீ காரம் உண்டு. இந்த நம்பிக்கை எல்லா காலத்திலும் தி.மு.கவில் இருப்பவர்களுக்கு உண்டு. என்னைப் பொருத்தவரை, இதுநாள் வரை கட்சி யில் நான் எதையும் கேட்டு அவர்கள் தந்தது இல்லை. தானாகவேதான், முன்னாள் முதல்வர் கருணாநிதியும் தந்திருக்கிறார்.

முதல்வர் ஸ்டாலினும், அப்படித் தான், எனக்கு மாநிலங்களவை உறுப்பினர் பதவியும், தற்போது இந்தப் பதவியையும் எனக்கு தந்திருக்கி றார். ஆர்வம், விடாமுயற்சி மற்றும் நேர்மைக்கான வெகுமதி தி.மு.க வில் எப்போதும் அளிக்கப்படுகிறது. தி.மு.க. தலைவர் எனக்கு கொடுத்திருக் கும், இந்த அங்கீகாரமானது, நான் இன்னும் மேலும் கடுமையாக கட்சிக்காக உழைத்து, இன்னும் பலரை இந்த கட்சியில் இணைத்து திமுக என்கிற இந்த தவிர்க்க முடியாத சக்தி மேலும் வலிமை பெற உழைப்பதற்கானது. அதுவே என் கடமை.

முதல்வர் ஸ்டாலின் கூறுவது போல, எனக்கு வழங்கப்பட்டிருக் கும் இந்தப் பதவியை, நான் ஒரு பொறுப்பாக கருதுகிறேன். பொறுப்பு வரும்போதே அதனுடன் கடமைகளும் அதிகமாக வருவதை நான் உணர்ந் திருக்கிறேன். கட்சியை வளர்க்க என் கடமைகள் மேலும் வேகமாக தொட ரும்.” என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.04.2025




இன்று நீங்கள் புதிய கட்ட வளர்ச்சி நோக்கி முன்னேறுவீர்கள். முறையான திட்டமும் தொழில் சார்ந்த அணுகு முறையும் உங்கள் முயற்சியில் வெற்றியை ஏற்படுத்தும்.

உங்கள் பணியில் பெயரும் புகழும் பெறுவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணவரவு சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பை உயர்த்துவீர்கள். உங்கள் தரத்தை உயர்த்துவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்கை நோக்கி முயற்சி செலுத்துவீர்கள். இதன் மூலம் திருப்தியான பலன் கிடைக்கும். உங்கள் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

கடின உழைப்பின் மூலம் வெற்றி காண்பீர்கள். சக பணியாளர்களிடம் நல்லுறவு கொண்டிருப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையான முறையில் உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். இது நல்லுறவு ஏற்பட வழி வகுக்கும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள். திருப்திகரமான நிலை பெறுவீர்கள்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று ஏற்படும் பதற்றம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வை கட்டுப் படுத்த வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் தவிர்க்கப்பட வேண்டும். நம்பிக்கை உணர்வின் மூலம் நற்பலன்களைப் பெறலாம்.

இன்று மன திடமும் நம்பிக்கையும் வேண்டும். இதன் மூலம் தடைகளைசமாளித்து உங்கள் பணிகளை ஆற்ற முடியம்.

உங்கள் துணையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.கருத்து வேறுபாடு காணப்படும். நீங்கள் தேவையற்ற பேச்சுக்களை பேசுவீர்கள்.

இன்று பணம் குறைந்து காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருப்பதாக உணர இயலாது. தொண்டை எரிச்சல் ஏற்படலாம்.




இன்று உங்களிடம் காணப்படும் உத்வேகம் காரணமாக நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். உங்கள் நலத்திற்கான பயனுள்ள முடிவை விரைவாக எடுக்கும் வகையில் உங்கள் மனநிலை இருக்கும்.

உங்களிடம் இருக்கும் சிறப்பான தகுதி காரணமாக இன்று உங்கள் செயல்களை சிறப்பாக செய்வீர்கள். உங்கள் பணிக்கு சிறந்த அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்கள் மனதில் ஓடும் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையேயான உறவு மேம்படும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாகவும் மகிழ்சிகரமாகவும் இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்க காண்பீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் இலக்குகளை நேர்மையான முயற்சி மூலம் அடைவீர்கள். உங்களிடம் உறுதியும் தைரியமும் காணப்படும். தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும்.

உங்கள் பணியில் நல்ல பெயரெடுப்பீர்கள். உங்கள் பணி செய்யும் முறை காரணமாக உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். அவரை மகிழ்ச்சிக்குள்ளாக்குவீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று அதிக பண வரவு காணப்படும். உங்கள் வங்கியிருப்பை அதிகரிப்பீர்கள். உங்களின் வளர்ச்சி கண்டு மகிழ்வீர்கள்.

உங்கள் மனம் அனுசரணையான நிலையில் இருக்கும்.




இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். இன்று சிறிது பாதுகாப்பின்மை உணர்வும், குறைந்த மகிழ்ச்சியும் காணப்படும். எனவே அமைதியாக இருப்பது சிறந்தது.

பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்க நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதனால் நீங்கள் உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். உங்களிடம் இன்று சிறந்த மன நிலை காணப்படாது.எனவே இன்று இருவரும் பேசுவதை தவிர்ப்பது நல்லது.

இன்று உங்களால் பணத்தை பயனுள்ள வகையில் செலவழிக்க இயலாது.




உங்கள் இலக்குகளை அடைய கடுமையாக உழைக்க வேண்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். இன்றைய நாள் சிறப்பாக அமைய இன்று பொறுமை அவசியம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். சக பணியாளர்களிடம் கவனமாக இருக்க வேண்டும்.

இன்று உங்கள் காதலை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். என்றாலும் நல்ல புரிந்துணர்வு ஏற்பட குறைந்த வாய்ப்பே உள்ளது.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். இன்றைய நாளை பயனுள்ள முதலீடுகள் செய்ய பயன்படுத்திக்கொள்ளுங்கள்

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.




இன்று சம்பவங்களை சகஜமாக எடுத்துக்கொள்ள வேண்டும். உங்கள் வளர்ச்சியை தடுக்கும் எந்த உணர்விற்கும் இடம் கொடுக்கக் கூடாது. உங்கள் அணுகுமுறையில் விவேகம் வேண்டும்.

பணியிடச் சூழல் குறைந்த அனுகூலத்துடன் காணப்படும். சகபணியாளர்களுடன் பிரச்சினை காணப்படும். திட்டமிட்டு பணிகளை திறமையாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள இயலாது. நீங்கள் இன்று சிறிய விஷயங்களைக் கூட பெரிதாக எடுத்துக் கொள்வீர்கள். இது நல்லுறவை பாதிக்கும்.

இன்று பண இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. தேவையற்ற செலவுகளும் காணப்படுகின்றது.

# இன்றைய ராசி பலன்கள் - 12.04.2025




உங்களின் சொந்த முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள். அதே சமயத்தில் திருப்தி குறைந்து காணப்படும். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். பணிகளை விரும்பி ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையை சந்திப்பதில் மகிழ்ச்சியடைவீர்கள். இருவரும் பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். இது உங்கள் எதிர்காலத்தைப் பற்றி திட்டமிட உதவும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்யப் பயன்படுத்துவீர்கள்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று தடைகளும் தாமதங்களும் நிறைந்து இருப்பதாக உணர்வீர்கள். முக்கிய முடிவுகளை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது நல்லது. நல்ல இசையைக் கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணிகள் சுமூகமாக நடக்க சகபணியாளர்களுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் சண்டையில் ஈடுபட வாய்ப்புள்ளது. அதனால் திருப்தியான மனநிலை காணப்படாது.

இன்று தேவையில்லாத செலவுகள் காணப்படும். வீட்டை புனரமைப்பதற்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

கால் வலி மற்றும் முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஓய்வாக இருக்க வேண்டும்.




இன்றைய செயல்களை மேற்கொள்வதை கடினமாக உணர்வீர்கள். இதனால் உங்கள் கட்டுப்பாட்டை இழப்பீர்கள். எனவே உங்கள் அணுகுமுறையில் பொறுமையும் உறுதியும் அவசியம்.

இன்று உங்கள் பணிகள் சுமூகமாக நடக்காது. உங்கள் சக பணியாளர்களிடம் அமைதியை கையாளவும்.

உங்கள் துணை உங்களை புறக்கணிப்பதாக எண்ணுவீர்கள். அதனால் எரிச்சல் உணர்வை துணையிடம் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இதனால் மனதில் குழப்பம் காணப்படும். எதிர்பாராத வகையில் பணம் வந்தாலும் அதனை பயனுள்ள வகையில் பயன்படுத்த இயலாது.




உங்களிடம் உறுதி இருந்தால் இன்று வளர்ச்சி காண்பீர்கள். நம்பிக்கையுடன் இருந்தால் வெற்றி உங்கள் கதவைத் தட்டும்.

உங்கள் பணிக்கு பாராட்டு பெறுவீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் உங்கள் பணியில் பிரதபலிக்கும்.

இன்று மகிழ்ச்சியான மாலைப் பொழுதாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியுடன் கானப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலை பொதுவாக சிறப்பாக உள்ளது. என்றாலும் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய கடன் வாங்க நேரலாம்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி மற்றும் நேர்மறையான மனநிலை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# கைப்பணித்துறை ஊடாக உலக சந்தையில் 5 வருடங்களில் ஒரு பில்லியன் டொலர்கள்!

## கைப்பற்றுவதே இலக்கு என்கிறார் பனை அபிவிருத்திச்சபைத் தலைவர்

(த.சுபேசன்)

5வருடங்களில் கைப்பணித்துறை ஊடாக உலக சந்தையில் ஒரு பில்லியன் டொலரைக் கைப்பற்றுவதே எமது இலக்கு என பனை அபிவிருத்திச்சபையினுடைய தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

பனைசார் பெண் கைப்பணியாளர்களை உருவாக்கும் முனைப்பில் அண்மையில் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்ட பத்து நாள் பயிற்சி நெறி குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்படி தகவலைத் தெரிவித்திருந்தார்.இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

பனைசார் கைப்பணி உற்பத்தித் துறையில் புது சகாப்தம் படைக்கப் படவுள்ளது.

பனம் பொருள்கள் மூலம் சர்வதேச தரத்திலான கைப்பணி உற்பத்திகளை மேற்கொள்ள முடியும் என நிருபிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் நட்சத்திர விடுதிகள்,சர்வதேச சந்தைகளைக் கைப்பற்ற பனை அபிவிருத்திச்சபை இலக்கு



வைத்துள்ளது.

வெறுமனே 5 இலட்சம் பனை மரங்களைக் கொண்டுள்ள பங்களாதேஷ் நாட்டில் பனை சார்ந்த உற்பத்திகள் சர்வதேச தரத்தில் செய்யப்படுகின்றன.

எமது நாட்டில் ஒரு பனை மட்டை மூலம் பெண் ஒருவர் உள்ளூர் சந்தையில் 1500 ரூபா பெறுமதியான கைவினைப் பொருளைத் தயாரிக்க முடியும். அந்தப் பொருளுக்கான கேள்வி சர்வதேச சந்தையில் 5000 ரூபா வரை நிலவுகின்றது.

இயற்கையான பொருள்களுக்கான சந்தைவாய்ப்பு அதிகரித்து வருகின்றது.

உலக சந்தையில் இலங்கையினுடைய கைப்பணித் துறைக்கு மிகப் பெரியதொரு வரவேற்பு உள்ளது.

சுற்றுலாப் பயணிகள் இரட்டிப்பாகியுள்ள இந்தத் தருணத்தில் பனை சார்ந்த கைம்பணிப் பொருள்களை சந்தைப்படுத்த பெரும் வாய்ப்பு உள்ளது.

பனை சார்ந்த பெண் கைப்பணியாளர்களுக்கான பத்து நாள் பயிற்சி நெறியின் போது எமது உற்பத்திகளை அமெரிக்காவிற்கு சந்தைப் படுத்துவதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இவ்வாறான பயிற்சிகள் ஊடாக பெண் தலைமையிலான குடும்பங்களுக்கு சிறந்த தொழில்வாய்ப்புக் கிடைக்கின்றது.

பெண்களுக்கான முக்கியமான தொழிற்துறையாக பனை சார் கைப்பணிப் பொருள் உற்பத்தி மாற்றமடையும். ஓய்வு நேரத்தை வீணாக்காமல் வருமானம் ஈட்டக்கூடிய துறைகளில் ஈடுபட வேண்டும். – என மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.